2017 பிப்ரவரி 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். முத்தையா, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

34—

அல்லுக்கூடம்

***5538—திரு. எஸ். முத்தையா:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, எமனேஸ்வரம் பகுதியில் அல்லுக்கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் என் தாய் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் தியாகத் தலைவி சின்னம்மா அவர்களையும் வணங்கி துவங்குகிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *பரமக்குடி தொகுதி, எமனேஸ்வரம் பகுதியில் அல்லுக்கூடம் அமைக்க அரசு முன்வருமா என்பது கேள்வி. மாண்புமிகு உறுப்பினர்கள் பலருக்கும் அல்லுக்கூடம் என்பது என்னவென்று தெரிய வேண்டும் என்பதற்காகத் தெரிவிக்க விரும்புகிறேன். பாவு மற்றும் ஊடை நூல்களுக்கு கஞ்சி தோய்த்தல் மற்றும் பாவு தோய்த்தல் செய்யும் இடத்திற்கு பாவடி இடம் அல்லது அல்லுக்கூடம் என்று பெயர்.*

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பரமக்குடி மற்றும் எமனேஸ்வரம் பகுதிகளில் உள்ள நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் பரமக்குடி கிழக்குப் பகுதியில் ரூ.6.10 இலட்சம் மதிப்பீட்டில் பரமக்குடி நகராட்சியால்

'அம்மா அல்லுக்கூடம்' என்ற பெயரில் 5,000 சதுர அடி பரப்பளவில் அல்லுக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது. பரமக்குடி பகுதியில் ஏற்கெனவே ஓர் அல்லுக்கூடம் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருவதால், எமனேஸ்வரம் பகுதிக்கு என தனியாக மேலும் ஓர் அல்லுக்கூடம் அமைக்க அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். முத்தையா அவர்கள்.*

முற்பகல் 10-55

திரு. எஸ். முத்தையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்த மாமன்றத்தில் நிறுத்திய புரட்சித் தலைவி அம்மா, உங்களை கடற்கரையில் புதைக்கவில்லை, எங்கள் கண்களுக்குள் புதைத்து விட்டு, கனத்த இதயத்தோடு காத்துக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) கடல் அலைகள் இல்லையம்மா, கடல் அலைகள் இல்லை உங்களை தினமும் ஒட்டி உரசுவது, இரத்த அலைகள். காரணம், நீங்கள் ஒட்டிக்கிடப்பது எங்கள் இதய சுவர்களில். எங்கள் விழி சுமந்த தாயே! உங்களை விதி சுமந்து சென்றதோ! இதயம் சுமந்த உங்களை இறைவன் சுமந்தானோ! அம்மா! உங்களுக்குப் பின் வெடித்து சிதறுவோம் என்று விழி விரித்து காத்துக் கிடந்தனர் சிலர். ஆனால், விதையாக விழுந்து விருட்சமாக முளைத்திருக்கிறோம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) ஊதினால் உடைந்து போக முருங்கை மரமா நாங்கள்! ஒன்றரைக் கோடி விழுதுகளைக் கொண்ட ஆழமான ஆலமரம் அம்மா அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி) 33 ஆண்டு காலம், சிங்கத்தின் குகைக்குள் சிலந்திப் பூச்சியாக இருந்திருக்கும்; சீறும் சிங்கம் எங்கள் சின்னம்மா, பெரியோர்களே. (மேசையைத் தட்டும் ஒலி) சீறும் சிங்கம் வரப் போகிறார்கள். சீறி தமிழகத்தில் பாயப் போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பரமக்குடி நகர் பகுதியில் சௌராஷ்டிரா வகுப்பைச் சார்ந்த கைத்தறி நெசவாளர்கள் அதிகம் வாழும் பகுதியான எமனேஸ்வரம் வாக்குச்

2017 பிப்ரவரி 1]

சாவடியில் இரட்டை இலை சின்னம் இல்லையென்றால் திரும்பி வந்துவிடும் தீவிர அம்மா விசுவாசிகள் வாழும் பகுதியாகும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்வது, அந்தப் பகுதிக்கு நிச்சயமாக மீண்டும் ஒரு நல்ல, சிறந்த, ஏ.சி. வசதி கொண்ட ஒரு அல்லுக்கூடம் அமைத்துத் தரும்படி மிகப் பணிவோடு கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அல்லுக்கூடம் அமைப்பதற்கான ஓர் இடத்தைத் தேர்வு செய்து தருவாராயின், அவருடைய இந்தக் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். முத்தையா அவர்கள்.*

திரு. எஸ். முத்தையா: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது அன்பான நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

35—

புற்றுநோய்ப் பிரிவு

***1051—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, குளச்சல் அரசு மருத்துவமனையில் புற்றுநோய்ப் பிரிவு அமைக்க அரசு முன்வருமா?